**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண். 56/2022**

**வா.சா. – 3– ரமேஷ்குமார்**

**நாள். 10.01.2025**

**வா.சா.3 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி பாவுலால் அவர்களின் சகோரர் டாக்டர் கணேசன் அவர்கள் கடந்த 30.05.1996 மற்றும் 08.07.1999 அன்று திண்டுக்கல் முத்துசாமி அவர்கள் மகன் பத்மநாபன் அவர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். அந்த கிரைய சொத்தினை வாதி பாபுலால் அவர்களின் பணத்தில் தான் கிரையம் பெறப்பட்டது என்பதற்கு ஆதரவாக கிரைய தொகையினையோ, கிரைய பத்திர செலவிலோ வாதி பாபுலால் அவர்கள் வங்கி கணக்கிலிருந்து ஏதேனும் பண பரிவர்த்தனை நடைபெற்றுள்ள என்றால் இல்லை. மேற்படி கிரைய தொகையினை குறிப்பிட்டு வாதி பாபுலால் அவர்கள் அவரது வருமான வரிகணக்கில் காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதி பாபுலால் அவர்களின் சகோதரர் டாக்டர். கணேசன் கடந்த 12.09.2011 அன்று திருச்சியை சேர்ந்த ராஜகோபால் தொண்டைமான அவர்களின் மகன் ரஜோகோபால் அவர்களிடமிருந்து சொத்தினை கிரையம் பெற்றுள்ளார். மேற்படிசொத்து பாபுலால் அவர்களின் பணத்திலிருந்தான் கிரையம் பெறப்பட்டது என்பதற்கு ஆதரவாக கிரைய தொகையினையோ, கிரைய பத்திர செலவிலோ வாதி பாபுலால் அவர்கள் வங்கி கணக்கிலிருந்து ஏதேனும் பண பரிவர்த்தனை நடைபெற்றுள்ள என்றால் இல்லை. மேற்படி கிரைய தொகையினை குறிப்பிட்டு வாதி பாபுலால் அவர்கள் அவரது வருமான வரிகணக்கில் காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.01.11 13:14:39 +0530

Additional District Judge(FAC),

Dindigul.